# TAMIL B – STANDARD LEVEL – PAPER 1
# TAMOUL B – NIVEAU MOYEN – ÉPREUVE 1
# TAMIL B – NIVEL MEDIO – PRUEBA 1

Friday 2 November 2007 (morning)
Vendredi 2 novembre 2007 (matin)
Viernes 2 de noviembre de 2007 (mañana)

1 h 30 m

---

TEXT BOOKLET – INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for Paper 1.
- Answer the questions in the Question and Answer Booklet provided.

LIVRET DE TEXTES – INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N’ouvrez pas ce livret avant d’y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l’épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

CUADERNO DE TEXTOS – INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la Prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.


© IBO 2007

**பனுவல் A**

## சார்ஸ் ஏற்படுத்திய பீதி

1. சில ஆண்டுகளுக்கு முன்பு, உலகையே கதிகலங்க வைத்தது ‘சார்ஸ் ’. உலகம் முழுதும் பரவிக் கோடிக்கணக்கில் மக்களைப் பாடாய்ப்படுத்தும் ‘எய்ட்ஸ் ’ நோய் ஏற்படுத்திய பயத்தையும் பின்னுக்குத் தள்ளி, மக்களைப் பெரும் பீதிக்கு உள்ளாகிய பெருமை இதற்குண்டு.

2. ‘சார்ஸ்’ என்பது என்ன? இது ஒரு நோய்க்கிருமியின் பெயரும் அல்ல. குறிப்பான நோயின் பெயரும் அல்ல. பல நோய் அறிகுறிகளின் கூட்டுத்தொகைதான் இது. இது அதிவேகமாகப் பரவக்கூடிய நோய். எடுத்த எடுப்பிலே, நோயின் வேகம் உச்சக்கட்டத்தை அடைவது, சுவாச உறுப்பைச் செயலிழக்கச் செய்வது, பின் மரணத்தை ஏற்படுத்துவது என்பன போன்ற பல சிக்கல்கள் அடுக்கடுக்காய்த் தோன்றும் ஒட்டுமொத்த விநோத கூட்டுத்தொகைக்குப் பெயர்தான் ‘சார்ஸ் ’.

3. இந்தத் தொற்றுநோய் முதன்முதலில் தென்சீனாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. சீனப் பெண் ஒருவர் நோய் அறிகுறிகள் தோன்றி ஐந்து நாள்களில் இறந்துவிட்டதுதான் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இடைவிடாக் காய்ச்சல், தலைவலி போன்றவற்றிற்கும் நிமோனியாவிற்கும் மருத்துவம் அளிக்கப்பட்டும் அவர் எவ்விதப் பலனின்றி ஐந்தே நாள்களில் எப்படி இறக்க நேரிட்டது என்பது புரியாத புதிராக இருந்ததே இதற்குக் காரணம்.

4. நோய் பரவும் வேகமோ கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு அபாயகரமாக இருந்தது. நோய் கொண்ட ஒருவர் தும்மினாலும், இருமினாலும் மற்றவருக்கு எளிதில் தொற்றக்கூடிய அபாயம் இந்த நோய்க்கு உண்டு. காற்றில் பரவும் நோய்களின் வரிசையில் இதுவும் ஒன்று. வெப்பம் நிறைந்த நாடுகள் நோய் பரவலுக்கு மிகச் சாதகமாய் அமைந்துவிடுகிறதாம். இதைப் பற்றித் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்ட உலக மருத்துவர்கள் கண்டறிந்த உண்மை இன்னும் நம்மை நடுநடுங்கச் செய்கிறது. சார்ஸ் நோய் தோன்றிய முதல் இடமாகிய சீனாவின் ‘ குவாங்டாங் ’ மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மூலமாகவே சார்ஸ் பரவியிருக்கக்கூடும் என மருத்துவ வல்லுநர்கள் கருத்துரைத்தனர். எந்த வைரஸ் இவ்வகை நோயைப் பரப்புகிறது என்பதைத் துல்லியமாகக் கண்டறிந்துவிட்டால் அதற்கான தடுப்புமருந்தையும் கண்டுபிடித்துவிடலாம் என்பது அவர்களது நம்பிக்கை.

5. சிங்கப்பூரில் இந்நோய் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்நோய் *[ — X — ]* எழுநூறு பேரை வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. இது உலகத்தாரின் **[ — 6 — ]** பெரிதும் ஈர்த்தது. சார்ஸ் தொடர்பான பல தகவல்கள் ஊகங்களாகவே இருந்தநிலையிலும் சிங்கப்பூர் அரசாங்கம் நோய்த்தொற்றல் தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு வெற்றிகரமாக **[ — 7 — ]** . நோயின் அறிகுறிகள் பற்றிய விரிவான செய்திகன் எல்லாத் தகவல் சாதன ஊடகங்களிலும் பரப்பப்பட்டது. இது மக்கள் மத்தியில்

பெரும் **[ — 8 — ]** ஏற்படுத்தினாலும், அந்நோய் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தத் தவறில்லை. பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டதும், பள்ளிப் பாடங்களை இணையத்தின் துணைகொண்டு நடத்தப் பள்ளிகளுக்கு ஆலோசனை கூறியதும் நெருக்கடியான நேரத்தில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாகும். சிங்கப்பூரைப் பொறுத்தமட்டில், சுற்றுப்பயணிகளின் வருகை நாட்டுக்கு வருவாய் ஈட்டித்தரும் லாபகரமான ஒன்றாகும். ஆனால், நாட்டுக்கு வரும் சுற்றுப்பயணிகள் எல்லாரையும் நன்கு பரிசோதித்த பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கும் நடவடிக்கை உண்மையில் அரசாங்கத்தின் **[ — 9 — ]** அணுகுமுறையையே காட்டியது.

6. சார்ஸ் பிரச்சினை உலகத்திற்கே சோதனையாக வந்தாலும், அந்தச் சோதனையிலும் சிங்கப்பூர் சாதனை படைத்தது அதற்கு உலக நாடுகளின் பாராட்டைத் தேடித் தந்தது.

உமா நாராயணசாமி, நவம்பர் 2003 வெளியீடு, கலைமகள் – மாதச் சஞ்சிகை

## பனுவல் B

### கடன் படுத்தும் பாடு

“கடன் கொடுக்காதீர்கள் ; கடன் வாங்காதீர்கள் ; கடன் கொடுத்தால் கொடுத்த கடனையும் அதை வாங்கிய நண்பனையும் இழந்துவிடுவீர்கள் ” என்று கூறியுள்ளார் நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர். இதைச் சொல்வது எளிது. நடைமுறையில் கடைப்பிடிப்பது சிரமமானது. உங்களால் முடிந்தால் கடன் கொடுங்கள். ஆனால், ஒருபோதும் பிறரிடம் கடன் கேட்காதீர்கள். இதுவே நான் கூறும் ஆலோசனை.

[ - X - ]

பணத்தை எப்படி ஈட்டுவது; அதை நிர்வகிப்பது; எப்படிச் செலவிடுவது ; எப்படிச் சேமிப்பது என்பனவற்றைத் தெரியாதிருந்த காலத்தில் நான்கூட இந்தத் தவற்றைச் செய்திருக்கிறேன். ஆனால், வாங்கிய கடனைத் திருப்பித் தரும் வரை அது நரக வேதனையாக இருந்தது. அந்த அனுபவங்கள் மிகச் கசப்பானவை. அவற்றை வாழ்நாள் முழுதும் மறக்கமுடியாது. இன்று யாரிடமும் கடன் வாங்குவதில்லை என்று உறுதி கொண்டிருக்கிறேன்.

[ - 11 - ]

கடன் வாங்குதல் என்பது ஒரு நோய். பிரச்சினைகளிலிருந்து நாம் தப்பிப்பதற்கு மேற்கொள்ளும் குறுக்குவழி. உண்மையில் அது மீள முடியாத துயரில் ஆழ்த்திவிடும் என்னும் உண்மையைப் பலரும் உணர்வதில்லை. கடன் வாங்குகிறவர், கடன் கொடுப்பவரிடம் ஒரு வகையில் அடிமையாகிறார். தன்மானத்தை இழந்துதான் பிறரிடன் கைநீட்டிக் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. கடனுக்குத் தவணை சொல்லும்போது பொய் சொல்ல வேண்டிய நெருக்கடியும் ஒருவருக்கு ஏற்படுகிறது. கடன் வாங்கும் பழக்கம் ஒருவரை அமைதியில்லாமல் அலையச் செய்கிறது. சிலர் குடும்பத்தோடு தம் உயிரையும் மாய்த்துக்கொள்ளும் கொடூரம் அடிக்கடி பத்திரிகையில் செய்தியாக வருவதை நாம் பார்க்கிறோம்.

[ - 12 - ]

இந்தக் கொடிய பழக்கத்திற்கு அடிமையாகிறவர்கள் ஏராளம். வாழ்நாள் முழுவதும் பலமுறை கடன்பட்டுத் தவிக்கும் பலரை நான் கண்டிருக்கிறேன். விரலுக்குத் தக்க வீக்கம் என்று தமிழில் ஒரு சொல் வழக்கு உண்டு. தம் சக்திக்கு மீறிய சுகபோக வாழ்வை மேற்கொள்ளும் ஒருவருக்குத்தான் கடன் தொல்லை வந்து பற்றிக்கொள்கிறது. ஏழை எளியவர்கள் மட்டுந்தான் கடனில் சிக்கிச் சீரழிகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. உண்மையில், நல்ல வசதி படைத்த பலரும் இந்தத் தப்பைச் செய்து நல்வாழ்வைத் தொலைத்துவிடுகிறார்கள்.

[ - 13 - ]

தொழில் வளர்ச்சிக்காக, வாணிபத்துக்காக, வீடு கட்டுவதற்காக வங்கியிலோ, தனிப்பட்டவர்களிடமோ ஓரளவு கடன் வாங்குவது இக்காலத்தில் தவிர்க்க இயலாததாக இருக்கலாம். இது வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே செய்யப்படுகிறது. இதில் உள்ள லாப நட்டங்களை நன்கறிந்து, பணத்தை நல்ல முறையில் நிர்வகித்து, முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடியவர்கள் இதனால் எவ்விதத்திலும் பாதிப்படைவதில்லை. உழைப்பை மூலதனமாகக் கொண்டு இவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு இந்தக் கடன் தொகை சில நேரங்களில் அவசியமும் ஆகிறது.

[ - 14 - ]

சிக்கனமும் சேமிப்புப் பழக்கமும் உள்ள ஒருவரைக் கடன் பேய் அண்டாது. கல்யாணம் காட்சிகளுக்கென்றும், குடும்பச் செலவுகளுக்கென்றும் சிலர் கடன் வாங்குவர். இவை தவிர்க்கக்கூடிய செலவாகும். இத்தகைய கடன் தொகைகள் எளிதில் திருப்பக் கூடியதும் அல்ல. வரவுக்குத் தக்க செலவு செய்யத் தெரியாதவர்களே இந்தச் சகதியில் விழுந்து தத்தளிக்கிறார்கள். வாங்கிய கடனுக்கு வாழ்க்கை முழுதும் வட்டி கட்டியே அவதிப்படுபவர்களும் இவர்களே. சிக்கனத்தையும் சேமிப்பையும் வாழ்க்கைநெறியாகக் கொள்பவர்களுக்கு இத்தகைய கடன் தொல்லையே ஏற்படாது.

கடன் பற்றிய ஷேக்ஸ்பியரின் கூற்றை நான் முழுமையாக ஏற்பேன். என் வாழ்க்கையில் நான் பிறருக்குக் கொடுத்து உதவிய கடன் தொகைகள் பெரும்பாலும் எனக்கு வந்து சேரவில்லை. கடன் வாங்கிய நண்பர்களையும் காணவில்லை.

அகிலன், 8-வது பதிப்பு, ஜூலை, 1992, வெற்றியின் இரகசியங்கள்

## பனுவல் C

### அன்பினால் ஆகாதது உண்டோ?

தமிழர்களுக்கு ஒரு விண்ணப்பம்

❶ உலகம் உய்ய வேண்டுமானால் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பு பரிணமிக்க வேண்டும். ‘ யாதும் ஊரே; யாவரும் கேளிர்’ என்னும் பரந்த சிந்தனைக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள். அன்புநெறியைப் போற்றி அறம் வளர்த்தவர்களும் அவர்களே. ஆனால், இன்று அத்தமிழர்களின் நிலை என்ன? தாயகமான தமிழகத்திலும் சரி, குடிபெயர்ந்து வாழும் மற்ற நாடுகளிலும் சரி, சிலர் கொடுமையே உருவெடுத்தாற்போன்று நடந்துகொள்வது வேதனையைத் தருகின்றது.

❷ தான் என்னும் அகங்காரம், தனது என்ற சுயநலம் தமிழனை அறியாமையில் ஆழ்த்துகின்றது. அதன் காரணமாக எவ்வளவு அக்கிரமங்கள் நிகழ்கின்றன? மனிதனாகப் பிறந்து விலங்கினும் இழிந்தவனாக நடந்துகொள்ளும் மூர்க்கத்தனம் அவன் உள்ளத்திலிருந்து அன்பு நீங்கியதால் விளைந்த தீவினையே ஆகும்.

❸ வாளினால் வெற்றி கொள்ள முடியாத செயல்கள் அன்பினால் வெற்றி கண்டிருக்கின்றன. பலத்தினால் சாதிக்க முடியாத காரியங்கள் இனிய சொற்களால் சாதிக்கப்பட்டிருக்கின்றன. அன்புக்கு அப்படியொரு மகத்துவம் உண்டு என்பதை எப்படித் தமிழர்கள் மறந்துபோனார்கள்?

❹ உலகத்தில் தோன்றிய மத போதகர்களெல்லாம் அன்பையே தங்கள் மதத்தின் அடிப்படையாக ஆக்கிக் கொண்டார்கள். அவர்கள் யாவரும் அன்பின் திருவுருவமாகவே திகழ்ந்திருக்கின்றனர். அவர்களிடம் காணப்பட்ட அன்பு என்னும் அரிய ஆற்றலே மக்களை அவர்கள்பால் ஈர்த்தது. எந்தவொரு உயிரையும் கொல்லுவது தகாது என்று அருளுரை பகர்ந்தார் கௌதம புத்தர். மக்கள் படும் பாட்டினைக் கண்டு அவருடைய உள்ளம் இளகி நின்றது. மனிதன் நோயால் துன்புறுவதை அவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இவ்வுலகில் துன்பங்களை நீக்குவதற்கு வழி காணவே, அரண்மனையை விட்டு அகன்றார் கௌதமர். அதற்கு ஒரே வழி, மனிதன் அன்புருவாகத் திகழ வேண்டுமென்பதுதான் அவர் கண்ட உண்மை. இந்த உண்மையை எப்படித் தமிழர்கள் உணராமல் போனார்கள்?

❺ “உன்னுடைய எதிரிக்கும் உதவி செய்! உனக்குத் தீங்கு செய்வோருக்கும் நன்மையே செய்!” எனக் கூறுகின்றார் இயேசு நாதர். அதை முற்றிலும் கடைப்பிடித்தவர் காந்தியடிகள். அவர் தென்னாப்பிரிக்காவில் இருந்த சமயம் அவரைச் சிறையிட்டுப் பல இன்னல்களைத் தந்தவர் தளபதி ஸ்மட்ஸ் என்பவர். தம்மைச் சிறையிட்டவருக்குக் காந்தியடிகள் பதிலுக்குக் காலணிகள் தயாரித்து வைத்திருந்து விடுதலையாகும்போது அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். இச்செயல் தளபதி ஸ்மட்ஸ் மனத்தை மாற்றியது. அக்காலணிகளை ஸ்மட்ஸ் நீண்ட நாள் பாதுகாத்து வந்தார். இன்னா செய்தாரை ஒறுத்தற்கு, காந்தியடிகள் அவர் நாண நன்னயம் செய்துவிட்டார்.

❻ ஆதலின் பிற உயிர்களிடம் அன்பு காட்டுவதே உயர்ந்த அறம். அதைவிட உயர்வான செய்கை இந்த உலகத்தில் வேறொன்று இருக்கவே முடியாது. அந்த உயர்ந்த வாழ்க்கையை வாழ்ந்து சிறந்தவர் தமிழர். இன்று போரிட்டு மடிவது எந்த நிலையிலும் ஏற்புடையதன்று. தமிழரே! உங்கள் முன்னோர் வகுத்த நெறியைப் பின்பற்றுங்கள். அன்பு வழியைப் பேணுங்கள். பிறரை அன்பால் வசப்படுத்துங்கள். உங்களைச் சூழ்ந்துள்ள துன்பங்கள் எங்கோ ஓடி மறையும். 'புதியதோர் உலகம் செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!' என்னும் பாரதிதாசனின் கனவை நனவாக்குவோம்.

அப்துற்-றஹீம், 21-வது பதிப்பு, மே, 1992, வாழ்க்கையில் வெற்றி

## பனுவல் D முதியோர் இல்லங்கள்

உறவுகளுக்குப் புனிதத்தன்மை தந்து ஒரே கூட்டுக்குடும்பமாக ஒரு காலத்தில் வாழ்ந்தது இந்திய சமுதாயம். இதன் மூலம் தம் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அது பாதுகாத்துக்கொண்டது. அக்காலத்தில் பல உறவுகள் ஒன்றுகூடி ஒரே குடும்பமாக வாழ முடிந்தது. இதனால், உறவுகளுக்குள் ஒரு நெருக்கமும் சமூகத்தில் நன்மதிப்பும் கிடைத்தது. ஆனால், இன்று திருமணத்திற்குப் பின்பு பெற்றோரையே முதியோர் இல்லங்களுக்கு அனுப்பும் அவலம் வந்துவிட்டது. நாளுக்கு நாள் இந்நிலை பெருகி வருகிறது. இக்காரணத்தால், பெரியவர்கள் மனத்தளவில் படும் துயரம் சொல்லில் அடக்க முடியாது.

மேலை நாட்டுக் கலாச்சாரத்தில், பிள்ளைகள் ஓரளவு வளர்ந்தவுடனே குடும்பத்தைவிட்டுப் பிரிந்துவிடுகிறார்கள். அல்லது, பெற்றவர்களே அவர்களை அனுப்பிவிடுகிறார்கள். அங்கே உறவுகளுக்கு முக்கியத்துவம் கிடையாது. ஆனால், இந்திய சமூகம் அப்படிப்பட்டதல்ல. நம் சமூகம் உறவுகளுக்கு, குறிப்பாகப் பெற்றோர்களுக்கு முக்கியத்துவம் தருவதாகும். ஆனால், இன்று நிலைமையே மாறிவிட்டது. முதியோர் இல்லங்களில் வயதான பெற்றோர்கள் அனாதைகளாக ஆதரவின்றி விடப்படுகிறார்கள். இதற்கு என்ன காரணம்?

இதைப்பற்றி ஒரு சிலர் இவ்வாறு கருத்துரைக்கின்றனர்:

**திருமதி லதாகிருஷ்ணசாமி (இல்லத்தரசி)**

"இன்று கூட்டுக் குடும்பம் கலைந்துபோனதே இந்நிலைக்குக் முக்கியக் காரணம். வயதான பெற்றோரைக் கவனித்து உபசரிக்க முடியவில்லை. கணவன், மனைவி இருவருமே வேலை செய்ய வேண்டியுள்ளது. முன்பு இருந்தது போல் இப்போது உறவுகளுக்கிடையேயும் அவ்வளவு நெருக்கம் இல்லை. இன்று இளையர்கள் சுதந்திரமாக இருக்கவே விரும்புகிறார்கள். எதற்கும் பிறரின் அனுமதியையோ ஆலோசனையோ கேட்க விரும்புவதில்லை. இதற்கெல்லாம், பெரியவர்கள் தடையாக இருப்பதாகக் கருதிவிடுகிறார்கள். பெரியவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொறுமையும் அக்கறையும் இன்றைய இளம் தம்பதிகளுக்கு மிகக் குறைவு. இதனால், குடும்பத்தில் பல சிக்கல்கள். இதற்கெல்லாம் தீர்வு – முதியோர் இல்லம்! இன்றைய குடும்பங்களில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உறவுநிலையில் நெருக்கம் அதிகமில்லை. பிள்ளைகள் பலருக்குப் பெற்றோர்களைவிட நண்பர்களே நெருக்கமான உறவாக இருக்கிறார்கள். தலைமுறை இடைவெளியால் பிள்ளைகள் பெற்றோர்களிடமிருந்து விலகிச்செல்லும் போக்கும் அதிகரித்துள்ளது. பிள்ளைகளை நல்லபடி வளர்ப்பது பெற்றோர்களுக்குச் சுமையாகிவிடுகிறது; வயதான பெற்றோர்களைப் பேணிக் காப்பது பிள்ளைகளுக்குப் பெருஞ்சுமையாகத் தெரிகிறது. "

**லஷ்மி (ஒன்பது வருடம் முதியோர் இல்லத்தில் தங்கி இருப்பவர்):**

“நான் பல அவமானங்களைச் சந்தித்தேன். பொறுக்க முடியாமல் நானாகவே முதியோர் இல்லத்தில் வந்துசேர்ந்தேன். இக்காலத்தில் பிள்ளைகளுக்குப் பெற்றோர் மீது அன்போ பாசமோ துளியும் கிடையாது. வசைமொழியால் நெஞ்சைப் புண்ணாக்கிவிடுகிறார்கள். அவமானமும், மனத்துயரும் தாங்க முடியாமல் பலரிடம் கேட்டுச் சமூகநலத்துறை உதவியுடன் இங்கே வந்துவிட்டேன். இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.”

**காந்தன் (பள்ளி ஆசிரியர்):**

“இன்று இளம் தம்பதியர் பலரும் வீட்டில் வளர்ந்ததைவிட விடுதிகளில் தங்கியதே அதிகம். குடும்பப் பற்று இவர்களிடம் குறைந்துபோனதற்கு இதுவே முக்கியக் காரணம். மேலைநாட்டுக் கலாச்சாரத்தின் தாக்கமும் இவர்களிடம் அதிகம். பொதுவாகவே, கூட்டுக்குடும்பமாக வாழ்வது இக்காலத்தில் நடைமுறைக்குச் சரிவராது. அதற்கு, உறவுகளுக்கிடையே மனப்பக்குவமும் புரிந்துணர்வும் அவசியம். அவை இல்லாதபோது மனக்கசப்பு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.”

**இராணிகிருஷ்ணன் (முதியோர் இல்லம் நடத்துபவர்):**

“இன்று பலரும் முதியோரைச் சுமையாகக் கருதுகிறார்கள். அன்பாக நடத்துவதில்லை. அவர்களுக்கு நோய் வந்துவிட்டால் பெருஞ்சுமை வந்துவிட்டது போலக் கவலைப்படுகிறார்கள். அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடுவதோடு உறவை முறித்துக்கொள்கிறார்கள். முதியோர் இல்லங்கள் வசதி குறைந்தவை என்று சிலருக்குத் தப்பான எண்ணம் உண்டு. அது தவறு. வீட்டைவிடக் காப்பகத்தில் பெரியவர்களை நன்றாகப் பார்த்துக்கொள்கிறோம். பல தேகப்பயிற்சிகள் தரப்படுகின்றன. பொழுதுபோக்கு அம்சங்களும் நிறைய இருக்கின்றன.”

உமா நாராயணசாமி, ஜூன், 2005, கலைமகள் – மாதச் சஞ்சிகை